ஓம் ஸ்ரீ குருப்யோ நம :

# ஸ்ரீ கிருஷ்ண ஜந்மாஷ்டமீ பூஜாக்ரமம்



# Sri Krishna Janmashtami Poojakramam

**e-Book in Tamil**

Compiled & Published by
**Srividhya Publications, Coimbatore**

ॐ



# ஸ்ரீ கிருஷ்ண ஜந்மாஷ்டமீ பூஜாக்ரமம்

# ஸ்ரீ க்ருஷ்ண ஜந்மாஷ்டமீ பூஜாக்ரமம்

# Sri Krishna Janmashtami Poojakramam

Draft Edition-Rev - August, 2021

Compiled & Published by:

**Srividhya Publications**

c/o V.Prabhakaran,
12, S.S.Layout, Veerappa Thevar Colony,
Coimbatore - 641 036.
Ph. +91 9894772245 (WhatsApp)
srividhyapublications@gmail.com

© reserved

**For private circulation only; Not for sale.**

**தனிப்பட்டவர்கள் உபயோகத்திற்கு மட்டும்; விற்பனைக்கு அல்ல.**

# ஸ்ரீ க்ருஷ்ண ஜந்மாஷ்டமீ பூஜாக்ரமம்

# Sri Krishna Janmashtami Poojakramam

## பொருளடக்கம்

## Contents


| பகுதிகள் | | பக்கம் |
|---|---|---|
| 1. | பதிப்புரை | 7 |
| 2. | இந்த நூல் பற்றிய குறிப்புகள் | 9 |
| 3. | ஸம்ஸ்க்ருத எழுத்துக்களின் உச்சரிப்பு விளக்கங்கள். | 13 |
| 4. | பூஜை த்ரவியங்கள் விவரம் | 19 |
| 5. | ஸ்ரீ க்ருஷ்ண ஜந்மாஷ்டமீ பூஜாக்ரமம் (பூஜை மந்த்ரங்கள், செய்முறை விளக்கம்) | 25 |
| 6. | புநர்பூஜை | 101 |
| 7. | இணைப்புகள் | 115 |
| 8. | எங்கள் மற்ற வெளியீடுகள் | 135 |



# பதிப்புரை

*கேட்டவர்க்கு கேட்டபடி வருவான் கண்ணன் என்பது கலியுகத்தில் நிதர்சன உண்மை. பாரதம் முழுவதும் அனைத்துவித மக்களும் தங்கள் கலாசாரப்படியும் மனம் விரும்பியபடியும் ரசித்துக் கொண்டாடி அனுஷ்டிக்கும் பண்டிகை நம் உள்ளங்கவர் கள்வனை ஸ்ரீ பாலக்ருஷ்ணனின் பிறந்த நாளான கோகுலாஷ்டமி எனப்படும் ஸ்ரீ க்ருஷ்ண ஜந்மாஷ்டமீ வ்ரதம்.*

*இந்த நாளில் தமிழ்நாட்டில் ப்ராமண சமூகத்தினர் மற்ற பூஜைகள் போலவே, இந்த ஸ்ரீ க்ருஷ்ண ஜந்மாஷ்டமீ பூஜையை முழுமையாக விரதமிருந்து, மந்த்ரங்களால் ஸ்ரீ பாலக்ருஷ்ணனை ஆவாஹநம் செய்து விரிவாக பூஜிப்பதே மரபு. பூஜையைப் பற்றியும், பூஜையை நடத்துவதைப் பற்றியும் பொதுவாக அனைவரும் நன்கு அறிந்துள்ளனர். தவிர இந்த வ்ரதத்தைப் பற்றிப் பல புத்தகங்களும், வலைத் தளங்களில் பல பதிப்புகளும் மக்களின் சந்தேகங்களைத் தீர்த்து அனைவரும் பூஜையை நன்கு நடத்த உதவுகின்றன.*

*ஆயினும் நாம் கண்ட பல புத்தகங்களிலும், வலைத்தளப் பதிப்புக்களிலும் பூஜை மந்த்ரங்களும் விவரங்களும் முழுமையாக அறிய இயலாது சுருக்கமாகவும், தவிர சிலவற்றில் சரியான ஸம்ஸ்க்ருத உச்சரிப்புகளை அளிக்காமலும் பதிப்பிக்கப்பட்டு உள்ளன. பூஜையை விரிவாக மற்றும் முழுமையாக நடத்த விரும்பும் எங்களைப் போன்ற பலருக்கு மேற்படி பதிப்புகள் முழுமையாக உதவுவது இல்லை என்பது எங்களது எண்ணம். மேலும் தற்காலத்தில் வீட்டிலுள்ள ஒரு சில பெரியவர்களுக்கே பூஜைகள் பற்றிய விவரங்களும் விளக்கங்களும் தெரியாத நிலையில், அடுத்து வரும் தலைமுறையினருக்கு அவர்கள் படிக்கும் பதிப்புக்களையே விவரங்களுக்கு நம்ப வேண்டியிருக்கும்.*

*ஸ்ரீ க்ருஷ்ண ஜந்மாஷ்டமீ பூஜை பற்றிய பல புத்தகங்கள் மற்றும் வலைத்தளப்பதிப்புகளை ஆராய்ந்து, விரும்பும் அனைவரும் நன்கு பூஜையை அனுஷ்டிக்கும் விதமாக* ***ஸ்ரீ க்ருஷ்ண ஜந்மாஷ்டமீ பூஜாக்ரமம்*** *என்கிற இந்த நூலைத் தமிழில் தொகுத்து இலவச e-Book ஆக வெளியிட்டு உள்ளோம். முக்கியமாக ஸ்மார்த்தர்கள்*

எனப்படும் தமிழ்நாட்டு ப்ராமண சமூகத்தினர் அனுஷ்டிக்கும் முறையில் இந்த நூல் வடிவமைக்கப்பட்டு உள்ளது. மற்ற சமூகத்தினர் விரும்பினுல் இந்நூலை தேவையான மாற்றங்களுடன் பயன் படுத்தலாம்.

இந்த நூல் வேதம் மற்றும் ஸாஸ்த்ரங்களை முறைப்படி கற்க இயலாத எங்களைப் போன்றவர்களுக்கும், மற்றும் தாங்களாகவே சரியாக பூஜை செய்ய விழைபவர்களுக்கும் மிகவும் உபயோகமாகும் என நம்புகிறோம். *Smartphone/Tab* ஆகியவற்றில் எளிதாக உபயோகிக்கும் வகையில் இந்த புத்தகத்தை *e-Book* ஆக, மந்த்ரங்கள் மற்றும் ப்ரயோகங்களைப் பெரிய எழுத்துக்களில் எளிதாக படிக்கும் வகையில் பதிப்பிட்டு உள்ளோம். விரும்பினுல் A-5 *size*-காகிதத்தில் அச்சிட்டுக் கொள்ளலாம். A-4 *size*-ல் புத்தகமாக ப்ரிண்ட் செய்ய விரும்புகிறவர்கள், அதற்கான பதிப்பைப் பெற எங்களை *e-Mail* மூலம் அணுகவும்.

இதைப் படிக்கும் மற்றும் உபயோகிக்கும் அன்பர்கள் இந்த நூலில் சேர்க்க வேண்டிய மற்றும் மாற்ற வேண்டிய விவரங்கள் மற்றும் குறைகளைத் தெரிவித்தால், அனைவருக்கும் பயன்படும் வகையில் இந்த நூலை மீண்டும் மாற்றங்களுடன் இலவச *e-Book* ஆக வெளியிட மிகவும் உதவியாக இருக்குமென வேண்டுகிறோம். இதில் காணும் விவரங்கள் அனைவராலும் அறியப்பட உதவிய உன்னதமான பல பதிப்புகளை உருவாக்கிய மேன்மையான ஆசிரியர்களுக்கும் மற்றும் எங்கள் புத்தகத்தை ஆராய்ந்து நல்ல கருத்துக்களை வழங்கிய நல்லோர்க்கும் எங்களது உளமார்ந்த நன்றிகள். இந்த நூலின் பெருமைகள் அவர்களின் பாதங்களுக்கு ஸமர்ப்பணம்.

அன்புடன் இறைவன் பணியில்,
பதிப்பாசிரியர் குழு

********

# இந்த புத்தகம் பற்றிய சில குறிப்புகள்

ஸ்ரீ பாலக்ருஷ்ண ஸ்வாமியை முறைப்படி கலஸத்தில் அல்லது பிம்பத்தில் அல்லது சித்திரத்தில் ஆவாஹநம் செய்து, மந்த்ரங்களைக் கூறி இந்த பூஜையை தாங்களாகவே விரிவாகக் கொண்டாட விரும்புவர்களுக்காக **ஸ்ரீ க்ருஷ்ண ஜந்மாஷ்டமீ பூஜாக்ரமம்** என்ற இந்த நூல் தமிழில் தொகுத்து உருவாக்கப் பட்டுள்ளது. இந்த நூலைப் பயன்படுத்துபவர்களுக்கான சில முக்கிய விவரங்களைக் கீழே பகிர்ந்து உள்ளோம்.

♦ ஸ்ரீ க்ருஷ்ண ஜந்மாஷ்டமீ எனப்படும் ஸ்ரீ பாலக்ருஷ்ண ஸ்வாமி பூஜையின் மகத்துவம் மற்றும் பலன்கள் பற்றி மக்கள் அனைவரும் நன்கு அறிவார்கள். பக்தி மார்க்கத்தில் இறைவனை அடையும் வழியைக் காட்டியவன் நம் கண்ணன்.

♦ ஸ்ரீ க்ருஷ்ண ஜந்மாஷ்டமீ பூஜையினை மக்கள் அவரவர் விருப்பப்படி நடத்தி மகிழ்ந்தாலும், நாள் முழுவதும் விரதம் அனுஷ்டித்து, மாலையில் ஸ்ரீ பாலக்ருஷ்ண ஸ்வாமியை கலஸம் அல்லது பிம்பத்தில் முறைப்படி மந்த்ரங்களால் ஆவாஹநம் செய்து, அனைத்து உபசார மந்த்ரங்களால் விரிவாக பூஜை செய்து, கண்ணனுக்கு ப்ரீதியான ப்ரஸாதங்களைப் படைத்து மகிழ்வது பொதுவாக தமிழ்நாட்டில் ப்ராமண சமூகத்தினர் பூஜையை நடத்தும் முறையாகும்.

♦ பல ஸம்ஸ்க்ருத மற்றும் தமிழ் பதிப்புக்களை ஆராய்ந்து, விரிவான முறையில் ஸ்ரீ பாலக்ருஷ்ண ஸ்வாமி பூஜைக்கு உகந்த ப்ரத்யேகமான உபசார மந்த்ரங்களும், ஸ்லோகங்களும், செயல் முறைகளும், வழிமுறைகளும் இந்நூலில் சேர்க்கப்பட்டுள்ளன. முக்கியமாக ஸ்மார்த்தர்கள் எனப்படும் தமிழ்நாட்டு ப்ராமண சமூகத்தினர் அனுஷ்டிக்கும் முறையில் இந்த நூல் விரிவாக அமைக்கப்பட்டுள்ளது. பக்தர்கள் தங்கள் குடும்ப, குல வழக்கப்படி விரும்பிய மாறுதல்களையும், தேவையானுல் உபசாரங்களைக் குறைத்தும் அனுசரித்துக் கொள்ளலாம். மற்ற

*சமூகத்தினர் விரும்பினால் இந்நூலை தங்கள் ஸம்ப்ரதாயப்படி மாற்றங்களுடன் பயன்படுத்தலாம்.*

♦ *கோகுலாஷ்டமி எனப்படும்* **ஸ்ரீ க்ருஷ்ண ஜந்மாஷ்டமீ பூஜை***யானது ஒவ்வொரு ஆண்டும் ஸ்ரீ க்ருஷ்ண பரமாத்மா இப்பூவுலகில் ஜனித்த சாந்த்ரமான ஶ்ராவண மாத க்ருஷ்ணபக்ஷ அஷ்டமி திதியன்று மாலை/இரவில் திதி உள்ள பொழுது பூஜை செய்து கொண்டாட வேண்டும். தமிழ் மாதங்களைக் கணக்கிட்டால் சாதாரணமாக ஸிம்ஹமாதம் எனப்படும் ஆவணி மாதத்திலும், சிலசமயம் கர்கடக மாதம் எனப்படும் ஆடி மாதத்திலும் பூஜை நாள் அமையும். ஸூர்ய அஸ்தமனத்திற்குப்பின் பூஜை செய்து ஸ்ரீ கண்ணன் ஜனித்த நள்ளிரவில் விழித்திருந்து கொண்டாடுவது பொதுவான வழக்கம். சில பிரிவினர் ஸ்ரீ கண்ணன் பிறந்த நக்ஷத்ரத்தை கணக்கிட்டு ஆவணி மாத ரோகிணி நக்ஷத்ரத்தன்று பூஜை செய்து* **ஸ்ரீ க்ருஷ்ண ஜயந்தி***யாகக் கொண்டாடுவதும் வழக்கம். சில பிரிவினருக்கு ரோகிணி நக்ஷத்ரமும் அஷ்டமி திதியும் இணைந்த காலத்தில் பூஜை செய்வது வழக்கம் என அறிகிறோம். சரியான பூஜை நாள் மற்றும் நேரத்தைப் பஞ்சாங்கப்படி அறியவும்.*

♦ *பூஜை வழிமுறைகள் வரிசை பல பதிப்புக்களில் முன்பின் மாறுபட்டுள்ளன. தமிழ் நாட்டில் ஸ்மார்த்த வைதீக சமூகத்தினரைக் கலந்து அவர்கள் அனுஷ்டிக்கும் முறையில் வரிசைக்ரமம் அமைக்கப்பட்டுள்ளது.*

♦ *தமிழ்நாட்டில் இல்லங்களில் நடத்தும் பூஜையின் பொழுது ஷோடசோபசார பூஜையில் முக்கியமான உபசாரங்களை மட்டும் கூறப்படுவதை அனுசரித்து இந்த நூலில் உபசாரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. விரும்புகிறவர்கள் மாற்றி அனுசரித்துக் கொள்ளலாம்.*

♦ *பூஜையில் பிம்பத்திலோ அல்லது சித்திரத்திலோ ஆவாஹநம் செய்தால்* **அஸ்மிந் கலஸே** *என வரும் இடங்களில்* **அஸ்மிந் பிம்பே/அஸ்மிந் சித்ரபடே** *என மாற்றிக் கொள்ளவும்.*

ப்ரத்யேகமாக ஸ்ரீ பாலக்ருஷ்ண ஸ்வாமி பூஜைக்கான பூஜை க்ரமமாக இந்நூல் வழங்கப்பட்டிருந்தாலும், மற்ற காலங்களிலும் வேறு நாட்களிலும் ஸ்ரீ க்ருஷ்ணரின் பூஜையை நடத்தவும் இந்த நூல் பயன்படும். அவ்வாறு பூஜை செய்யும் பொழுதும் கலஸத்திலோ, பிம்பத்திலோ அல்லது சித்திரத்திலோ ஆவாஹநம் செய்வதே பொதுவான வழக்கம். அவர்களுக்கு உதவும் வண்ணம் பூஜையில் அனுசரிக்க வேண்டிய மாற்றங்களைத் தேவையான இடங்களில் குறிப்பிட்டு உள்ளோம். அவ்வாறான பூஜை முடிந்த பின் உடனேயே கலஸம்/பிம்பத்தை யதாஸ்தாநம் செய்து விஸர்ஜநம் செய்து விடலாம்.

♦ பூஜை முடிந்தவுடன் ஸ்தோத்திரங்களைச் சொல்லி ஸ்வாமியை ஆராதித்து, ஆரத்தி எடுத்து பூஜையை முடிக்க வேண்டும். பலர் இரவு முழுவதும் விழித்திருந்து வ்ரதம் அனுஷ்டிப்பார்கள். வ்ரதமிருந்து ஸ்வாமியை ஆவாஹநம் செய்து பூஜை செய்திருந்தால், மறு நாள் காலை/முற்பகலில் புநர் பூஜை செய்து பிறகு ஸ்வாமியை யதாஸ்தாநம் செய்து, விஸர்ஜநம் செய்து விடலாம். வசதிப்படாதவர்கள் ப்ரதான பூஜை முடிந்த சிறிது நேரத்திற்குப்பின் புநர் பூஜை இல்லாமல் யதாஸ்தாநம் செய்து விட்டு மறுநாள் கலஸம் மற்றும் பிம்பங்களை விஸர்ஜநம் செய்து கொள்ளலாம். கலஸம் வைத்திருந்தால், அதைக் கலைத்துப் பொருட்களை உபயோகப்படுத்திக் கொள்ளலாம்.

♦ விரும்பி, வசதிப்பட்டு ஆசார்யர் வைத்து பூஜை செய்தால் மிகவும் சிறப்பாகும்.

♦ வேத மந்த்ரங்கள் நீலவண்ணத்தில் கொடுக்கப்பட்டு உள்ளன. அறியாதவர்களும், பெண்களும் அவற்றைத் தவிர்த்து பூஜையை மேலே தொடரலாம். பெண்கள் வேத மந்த்ரங்களைச் சொல்வதைத் தவிர்க்க வேண்டும் என்பது ஆசார்யர்களின் கருத்து. தவிர புத்தகத்தை அச்சிட்டு உபயோகிப்பவர்களுக்கு உதவியாக வேத மந்த்ரங்களின் ஆரம்ப மற்றும் இறுதி வரிகளின் அருகில் இடதுபக்க விளிம்பில்( *in the left margin*) $» என்கிற குறியீடுகள் கொடுக்கப்பட்டுள்ளன.

♦ பூஜையின் அங்கமாக ஸ்ரீ பாலக்ருஷ்ண ஸ்வாமி அஷ்டோத்ர சதநாமாவளி அர்ச்சனை இங்கு கொடுக்கப்பட்டு உள்ளது. சிலருக்கு ஸஹஸ்ரநாம அர்ச்சனைகளாக செய்வதும் வழக்கமாக உள்ளது.

♦ சாஸ்த்திரமாக பூஜை செய்பவர்கள், ப்ரஸாதங்களை மடியாகத் தயார் செய்து, பூஜையன்று விரதமிருந்து மடியாக பூஜை செய்வது மிகவும் விசேஷமானது. இந்த விஷயத்தில் அவரவர்கள் தனிப்பட்ட விருப்பமே ப்ரதானம்.

♦ பூஜைக்கான விசேஷ ப்ரஸாதங்கள் பற்றிய விவரங்கள் பல பதிப்புகளில் காணப்படுகின்றன. குடும்ப வழக்கப்படி தயார் செய்து கொள்ளவும். ப்ரஸாதங்களின் ஸம்ஸ்க்ருத பெயர்கள் பக்கம் 125-128-ல் கொடுக்கப்பட்டு உள்ளன.

♦ பூஜைக்குத் தேவையான பொருட்கள் மற்றும் பாத்திரங்களின் விவரங்கள் பக்கம் 19-24 மற்றும் பக்கம் 129-131-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

♦ பூஜை மந்த்ரங்கள் ஸம்ஸ்க்ருத உச்சரிப்புடன் தடித்த பெரிய எழுத்துக்களிலும், விவரங்கள், குறிப்புகள், செயல்முறைகள் ஆகியன நடைமுறைத் தமிழில் சிறிய எழுத்துக்களிலும் கொடுக்கப்பட்டுள்ளது இந்த நூலை எளிதாகப் பயன்படுத்த உதவும் என நம்புகிறோம்.

♦ பூஜைக்கு முன்பாக புத்தகத்தை ஒருமுறை படித்து வைத்துக் கொள்வது, முக்கியமாக இந்த நூலில் கொடுக்கப்பட்டுள்ள ஸம்ஸ்க்ருத உச்சரிப்பு விவரங்களை அறிந்து கொள்வது பூஜையை சிறப்பாக நடத்த உதவும். மற்ற விவரங்களுக்கும் சந்தேகங்களுக்கும் தங்கள் குடும்பப் பெரியவர்களையோ ஆச்சார்யரையோ கலந்து கொள்ளலாம்.

********

# ஸம்ஸ்க்ருத உச்சரிப்பு விளக்கங்கள்

*நமது வேதம் மற்றும் பூஜை மந்த்ரங்கள், ப்ரயோகங்கள் அனைத்தும் ஸம்ஸ்க்ருத மொழியில் உள்ளதால், அந்த மந்த்ரங்களை ஸம்ஸ்க்ருத மொழி அமைப்பின்படி உச்சரிப்பது மிகவும் உகந்தது. அதனால் தமிழ் மட்டுமே எழுத்து மொழியாக அறிந்த பலருக்கு உபயோகப்படும் வகையில் பூஜை மந்த்ரங்களை தமிழ் எழுத்துக் களில் பதிவிடுவது அவசியமாகிறது.*

*தமிழில் ஸம்ஸ்க்ருத மந்த்ரங்களையும் ஸ்லோகங் களையும் இதுவரை பதிப்பிக்க பலவித முறைகள் பயன்பாட்டில் உள்ளன. அவற்றை ஆராய்ந்து, சிலநாள் பழக்கத்தில் அனைவரும் எளிதாக பயன்படுத்தும் வகையில் பொருத்தமான கணிணி மென்-பொருளில் (computer software) உள்ள தமிழ் எழுத்துக்களின் அச்சுக் களையும்(fonts) மற்றும் குறிகளையும் கீழ்க்கண்ட முறையில் உபயோ கப்படுத்தி எங்களது புத்தகங்களைப் பதிப்பித்து வருகிறோம்.*

*நாங்கள் பயன்படுத்தியுள்ள இந்த அச்சுமுறை மற்றும் பயன்பாட்டு விவரங்கள் நூலின் அடுத்துவரும் பக்கங்களில் கொடுக் கப்பட்டுள்ளன. சில வருடங்களாக எங்களால் பயன்படுத்தப்பட்டு வரும் இந்த புதியமுறை, சிலநாள் உபயோகத்தில் மற்றும் பயிற்சி யில், ஸம்ஸ்க்ருத உச்சரிப்புகளை மற்ற முறைகளைவிட எளிதாகப் பயன்படுத்த உதவும் என்பது எங்களது அனுபவம்.*

*முடிந்தவரை ஸம்ஸ்க்ருத எழுத்துக்களின் சரியான உச்சரிப்புகளுக்கு இணையான உச்சரிப்புகளை உடைய தமிழ் எழுத்துக்களின் அச்சுக்களையே(fonts) உபயோகப்படுத்தியுள்ளோம். தமிழிலிருந்து மாறுபட்ட உச்சரிப்புகளை உடைய ஸம்ஸ்க்ருத எழுத்துக்களைக் குறிக்க வித்தியாசமான தமிழ் எழுத்துக்களின் அச்சுக்களை(fonts) மற்றும் குறிகளை பின்வரும் அட்டவணையில் உள்ள முறையில் உபயோகப்படுத்தியுள்ளோம். இவ்வகையான புது வகை தமிழ் அச்சுக்களின் மூலம் சரியான ஸம்ஸ்க்ருத உச்சரிப்புகள் சில முறை முயன்று படிப்பவர்களுக்கு எளிதாகப் பாடமாகும் என நம்புகிறோம்.*

## 1. சம்ஸ்க்ருத எழுத்துக்களுக்கான தமிழ் எழுத்து அச்சுக்கள்

*உதாரணமாக தமிழில்* **க (ka)** *என்ற ஒரு எழுத்துதான் உள்ளது. ஆனால் ஸமஸ்க்ருதத்தில்* **क ख ग घ** *என்ற நான்கு வகை* **க (ka)** *உச்சரிப்புகள் மற்றும் எழுத்துக்கள் உள்ளன. இந்த உச்சரிப்பு களைச் சரியாக அறியும் வகையில் முறையே* **க**, **ᵏக**, க ᵏக *என்ற நான்கு வகையான அச்சுக்களை(fonts) பயன்படுத்தியுள்ளோம்.* ᵏ*மற்றும்* ᵏ *ஆகிய prefix-ஐ* **க** *மற்றும்* க *எழுத்துக்களுடன் பயன்படுத்தும் பொழுது, முறையே* **ख, घ** *ஆகிய எழுத்துக்களுக்கான சரியான உச்சரிப்பு எளிதாக அமைகிறது.*

*இதே போல்* **ச, ட, த, ப** *என்ற மற்ற நான்குவகை உயிர்-மெய் எழுத்துக்களுக்கும் மேற்கண்டவாறு நான்கு வகையான அச்சுக்களை(fonts) உபயோகப்படுத்தியுள்ளோம். ஸம்ஸ்க்ருதத் திற்கே உரிய* **श ष स ह क्ष श्री** *என்கிற எழுத்துக்களுக்கு முறையே தமிழில் நடைமுறையில் உள்ள* **ശ, ஷ, ஸ, ஹ, க்ஷ, ஸ்ரீ** *என்கிற தமிழ் அச்சுக்களைப் பயன்படுத்தியுள்ளோம்.*

*ஸம்ஸ்க்ருதத்தில்* **எ, ஒ, ழ, ற, ன** *ஆகிய எழுத்துக்கள் மற்றும் உச்சரிப்புகள் கிடையாது. ஆகையால் தமிழிலும் இந்த எழுத்துக்களைப் பயன்படுத்தவில்லை.*

## 2. சிறப்பு எழுத்துக்கள் மற்றும் குறிகள்

*ஸம்ஸ்க்ருதத்திற்கே உரிய* **ऋ ॠ ऌ ॡ** *என்கிற உயிர் எழுத்துக்களுக்கு முறையே தமிழில் நடைமுறை வழக்கில் எழுத் துக்கள் எதுவும் இல்லை. அவற்றிற்கு முறையே* **ரு, ரூ, ளு, ளூ** *என்கிற தமிழ் அச்சுக்களை உபயோகித்துள்ளோம். அவை மெய்யெழுத் துக்களுடன் இணைந்து வரும்பொழுது,* ரு, ரூ, ளு, ளூ *என்கிற அச்சுக்களை* suffix-*ஆகப் பயன்படுத்தியுள்ளோம்.* **க்+அ=க** *என்பது போல்* **க்+ரு=க்ரு.** **க்**, ரு*ஆகிய இரண்டு எழுத்துக்களையும் சேர்த்து* **க்ரு** *என ஒன்றாக ஒரே எழுத்தாக உச்சரிக்க வேண்டும். உதாரணம்:* **க்ருஷ்ணு, ந்ருணாம், க்ருணாண, க்ளுப்த, த்ருஷ்டி.**

ऽ என்ற குறி தொக்கி நிற்பதைக் குறிக்கிறது. (ऽ-அ; ऽऽ-அஅ). சந்திரப்பிறையுடன் கூடிய ँ என்ற இந்த எழுத்துக்கு 'க்ம்' என்று கொடுத்துள்ளோம். இவ்வகையான குறிகள் சில ஸம்ஸ்க்ருத மற்றும் தமிழ்ப் பதிப்புகளில் மாற்றியோ, இல்லாமலேயோ காணப் படுகின்றன. விஸர்கம்(ஃ), comma(।) , full stop(॥) ஆகிய மற்ற ஸம்ஸ்க்ருத குறிகளுக்கு கம்ப்யூட்டரில் சாதகமான முறையில் வரும் அச்சுக்குறிகளைப் பயன்படுத்தி உள்ளோம்.

## 3. ஸ்வரக் குறிப்புகள்

பல ஸம்ஸ்க்ருத மந்த்ரங்களிலும் ஸ்லோகங்களிலும் ஸ்வரங்களுக்கான குறிகள் காணப்படும். எங்கள் புத்தகங்களில் ஸ்வரம் பற்றிய குறிகளை, எங்களுக்குக் கிடைத்த நூல்களில் உள்ளபடி நாங்கள் கொடுத்துள்ளோம். அனைத்து மந்த்ரங்களுக்கும் முழுவது மாக எங்களுக்கு குறிப்புகள் கிடைக்கவில்லை. ஸ்வரம் பற்றிய குறிகள் குறித்த விளக்கம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. இருந்தாலும் மந்த்ரங்களை நன்கு பாடம் செய்ய விரும்புபவர்கள், இதனை வேதம் மற்றும் ஸம்ஸ்க்ருதம் நன்கறிந்த வித்தகர்களிடம் கற்றுத் தெரிந்து கொள்வது நல்லது. கம்ப்யூட்டரில் எங்களுக்கு எளிதாக பயன்படுத்தும் வகையில் ஸ்வர குறிகளை அமைத்துள்ளோம். மற்ற வர்களின் பதிப்புகளில் குறிகள் மாறுபடும்.

### உதாத்தம்:

எந்தக் குறியும் இடப்படாமல் உள்ள எழுத்துக்களை நடுநிலையாக சாதாரணமாக உச்சரிக்கவும்.

### அனுதாத்தம்:

கீழே கோடு இடப்பட்ட எழுத்துக்களை சற்று இறக்கி உச்சரிக்கவும். (உதாரணம் - **வரு<u>ணேஹ</u>**போ௴தி -யில் **<u>ண</u>** )

### ஸ்வரிதம்:

எழுத்துக்கு மேல் 1 என குறியிடப்பட்ட எழுத்தை சற்றுத் **தூக்கி** உச்சரித்து உடனே இறக்க வேண்டும். (உதாரணம் - ப்ர்[1]கோ **தேவஸ்[1]ய** த்**தீமஹி** -யில் [1]கோ மற்றும் [1]ய )

## தீர்க்க ஸ்வரிதம்:

*எழுத்துக்கு மேல் 2 என குறியிடப்பட்ட எழுத்தை நன்கு* **மேலே தூக்கி** *நீட்டி உச்சரிக்க வேண்டும். (உதாரணம்-* **ப்ரசோத²யாத்** *-ல்* **²யா** *மற்றும்* **ர²த்தேப்யோ நம:** *-வில்* **²த்தே** *)*

*கடைசி இரண்டு குறிகளும் உச்சரிக்க வசதியாக அந்தந்த எழுத்தின் தொடக்கத்திலேயே கொடுக்கப்பட்டுள்ளன.*

*பின்வரும் அட்டவணையில் ஸம்ஸ்க்ருத எழுத்துக்கள் மற்றும் அவற்றிற்காக பயன்படுத்தப்பட்டுள்ள தமிழ் அச்சுக்கள் (fonts) கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிற்கு நிகரான உச்சரிப்புகள் ஆங்கிலத்திலும் கொடுக்கப்பட்டுள்ளன. மேலும் குறிப்பிட்ட எழுத்துக் களுக்கான ஓரளவு சரியான உச்சரிப்புகளை உடைய தமிழ் வார்த்தைகளும் உதாரணத்திற்காகக் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த விவரங்கள் அனைவருக்கும் முடிந்தவரை ஸம்ஸ்க்ருத வார்த்தைகளை சரியான உச்சரிப்புடன் சொல்ல உதவும் என நம்புகிறோம்.*

*எனினும் ஸம்ஸ்க்ருத எழுத்துக்களின் சரியான உச்சரிப்பு கள் தமிழ் மற்றும் ஆங்கில எழுத்துக்களின் உச்சரிப்பிலிருந்து மாறு பட்டது என்பதனை அனைவரும் உணர்ந்து, சரியான ஸம்ஸ்க்ருத உச்சரிப்புகளை மொழி அறிந்தவர்களிடம் கேட்டு அறிந்து, பின் தமிழில் உள்ள ஸம்ஸ்க்ருத மந்த்ரங்களையும் ஸ்லோகங்களையும் படிப்பது பயனளிக்கும்.*

********

## சம்ஸ்க்ருத எழுத்துக்களுக்கான தமிழ் எழுத்து அச்சுக்கள்–(fonts)
## Sanskrit Alphabets and Representative Tamil Fonts used

உயிர் எழுத்துக்கள்:

अ आ इ ई उ ऊ ऋ ॠ

அ ஆ இ ஈ உ ஊ ரு ரூ

ए ऐ ओ औ अं अः ऌ ॡ

ஏ ஐ ஓ ஔ அம் அஃ ளு ளூ

மெய் எழுத்துக்கள்:

क ख ग घ ङ च छ ज झ ञ

க க்க க க்க ங ச ச்ச ஜ ஜ்ஜ ஞ

ट ठ ड ढ ण त थ द ध न

ட ட்ட ட ட்ட ண த த்த த த்த ந

प फ ब भ म

ப ப்ப ப ப்ப ம

य र ल व श ष स ह

ய ர ல வ ஶ ஷ ஸ ஹ

சிறப்பு எழுத்துக்கள் மற்றும் குறிகள்:

श्री क्ष ज्ञ ॐ ऽ ँ ँ : । ॥

ஶ்ரீ க்ஷ ஜ்ஞ ஓம் ऽ ம் க்ம் : । ॥

எண்கள்:

१ २ ३ ४ ५ ६ ७ ८ ९ ०

1 2 3 4 5 6 7 8 9 0

*******

## தமிழ்–சம்ஸ்க்ருத அச்சுக்கள் (fonts) & உச்சரிப்பு விளக்கங்கள்

Order: Sanskrit Alphabet - English Notation- Tamil Font used -sample Tamil word

क - ka$_{h}$ - க - கடவுள்

ख -$^{k}$ka$_{h}$ - க்க - காட்சி

ग - ga$_{h}$ - க - ராகம்

घ - $^{g}$ga$_{h}$ - க்க - கம்பீரம்

च - ca$_{h}$ - ச - சரணம்

छ - $^{c}$ca$_{h}$- ச்ச - சாயா

ज - ja$_{h}$ - ஜ - ஜலம்

झ - $^{j}$ja$_{h}$ - ஜ்ஜ - ஜாங்கிரி

ट - ta$_{h}$ - ட - இஷ்டம்

ठ - $^{t}$ta$_{h}$ - ட்ட - கடினம்

ड - da$_{h}$ - ட - குடம்

ढ - $^{d}$da$_{h}$ - ட்ட- மூடன்

त - tha$_{h}$ - த - தனிமை

थ - $^{t}$tha$_{h}$ - த்த - பித்தம்

द - dha$_{h}$ - த - பாதம், தநம்

ध -$^{d}$dha$_{h}$ - த்த - ராதா

प - pa$_{h}$ - ப - பழம்

फ - $^{p}$pa$_{h}$ - ப்ப - பலன்

ब - ba$_{h}$ - ப - இன்பம்

भ - $^{b}$ba$_{h}$ - ப்ப - பயம் :

*******

श - $^{s}$ca$_{h}$ - ஶ -சங்கு,சிவம்

ष - $^{s}$sha$_{h}$ - ஷ -புஷ்பம்

स - $^{s}$sa$_{h}$ - ஸ -ஸரஸ்வதி

ह - ha$_{h}$ - ஹ - ஹாரம்

क्ष -$^{k}$$^{s}$sha$_{h}$- க்ஷ- க்ஷ - பக்ஷி

ज्ञ -$^{j}$j$^{g}$na$_{h}$-ஜ்க்ஞ-ஜ்ஞ- யஜ்ஞம்

श्री - shri - ஸ்ரீ -ஸ்ரீதரன்

ऋ - $^{r}$ru-ர்ரு- ரு -ரு- ருஷி,

ॠ - $^{ir}$ru$_{u}$ - ர்ரூ -ரூ- ரூ

ल - la$_{h}$ - ல - கலகம்

ळ - $^{l}$L̲a$_{h}$ - ள - உள்ளம்

ऌ - $^{l}$L̲u - ள்ளு - ளு ளு

ॡ - $^{il}$L̲u$_{u}$ - ள்ளூ - ளூ ளூ

ꣳ - igum - க்ம் - ஓக்ம்ஸத்யம்

ॐ - aum - ஓம் - ஓம்

குறிகள் தொக்கி நிற்பது:

ऽ - a - ऽ - அ

ऽऽ - aa - ऽऽ - அஅ

: - $^{h}$h$_{a}$ - : - ஹ்அ

*******

## பூஜை த்ரவியங்கள்/ பொருட்கள் பற்றிய குறிப்புகள்

1) புஷ்பங்கள், பத்ரங்கள், மாலை, பழவகைகள்

*தமிழ் நாட்டில் **ஸ்ரீ க்ருஷ்ண ஜந்மாஷ்டமீ** போன்ற பூஜைகளுக்கு பொதுவாக வாசனையுள்ள பூக்களையே உபயோ கப்படுத்துகிறுர்கள். ஷோடசோபசார பூஜை, அங்க பூஜை, புஷ்ப பூஜை, பத்ர (இலைகள்) பூஜை, அஷ்டோத்தர பூஜை என அனைத்து பூஜைகளிலும் நாநாவித பத்ர புஷ்பாணி என்று பத்ரங்கள் மற்றும் புஷ்பங்களாலேயே பூஜை செய்யப்படுகிறது. பக்தர்கள் தங்கள் வழக்கப்படி நடத்திக் கொள்ளலாம். பூஜைக்கு உகந்த புஷ்பங்கள் மற்றும் பத்ரங்களின் ஸம்ஸ்க்ருத பெயர்கள்* *பக்கம்-121-124-ல்* *கொடுக்கப்பட்டுள்ளன. ஸ்ரீ க்ருஷ்ண ருடைய பூஜையில் அரளிப்பூவை சேர்ப்பது பற்றி மாறுபட்ட கருத்துக்கள் உள்ளன.*

**உகந்த புஷ்பங்கள் - மல்லிகை, முல்லை, ஜவந்தி, தாழம்பூ, சாமந்தி, சம்பங்கி, ஜாதி, பவழமல்லி, வாசனையுள்ள பன்னீர் ரோஜா, துளசி, தாமரை, செண்பகம், மனோரஞ்சிதம், மருக்கொழுந்து, மருகு, விபூதி பச்சை, தெச்சி, மந்தாரை, பாடலி, வகுளம்.**

**உகந்த பத்ரங்கள் – பொதுவாக இணைப்பில் கொடுக்கப்பட்டவை**

**ஆகாதவை– அரளி, துலுக்க சாமந்தி, கோழிக்கொண்டை, மற்ற வாசனையற்ற மலர்கள், அருகம்புல்**

**பழங்கள்– முழுமையாக உள்ள அனைத்து பழங்களும் ஏற்றவை.**

*ஸ்வாமிக்கு அணிவிக்கும் மாலை கலஸத்தின் அளவைப் பொறுத்து மேற்கண்ட பூக்களைக் கொண்டு வீட்டி லேயே கட்டிக் கொள்ளலாம். கடையில் வாங்கினுல், சரியான அளவுக்குப் பார்த்து வாங்கிக் கொள்ளவும். ஆகாத மலர்கள் மாலையில் இல்லாமல் பார்த்துக்கொள்ளவும். அர்ச்சனைக்கான புஷ்பங்களைத் தனித்தனியாக வாங்கி, காம்பு, குப்பைகளை நீக்கி கலந்து கொள்ளவும். கடையில் தயாராக கலந்து வைத்து*

இருக்கும் உதிரி புஷ்பங்களில் அதிகமாக அரளியும் மற்ற ஆகாத புஷ்பங்களும், காம்புகள் மற்றும் குப்பைகளும் இருக்கும்.

அநேக மக்கள் பிம்பம்/கலஸத்திற்கு அலங்காரம் செய்யும் பொழுதே சந்தன குங்குமம் மற்றும் மாலை ஆகிய வற்றை ஸ்வாமிக்கு அணிவித்து விடுவார்கள். அதனால் பூஜை நடக்கும் பொழுது ஒரு சிறிய பூச்சரம் சாற்றி, மற்ற அலங்காரங் களுக்குப் ப்ரதியாக புஷ்பம் மற்றும் அக்ஷதை போடுவதும் உண்டு. 2 வஸ்த்ரங்களுக்காக (வஸ்த்ரயுக்மம்) பஞ்சில் மஞ்சள் குங்குமம் சேர்த்து திரித்த மாலைகள் போட்டுக்கொள்ளலாம்.

### 2) மஞ்சள், குங்குமம்

பூஜையின் பொழுது மஞ்சள் பிள்ளையார் பிடிக்க வும், மற்ற ஆராதனைகளுக்கும் தேவையான மஞ்சள் பொடி, குங்குமம் ஆகியவற்றை புதிதாக வாங்கிக் கொள்ளவும். வீட்டிலுள்ள நாம் உபயோகித்த பண்டங்களைத் தவிர்ப்பது நன்று.

### 3) அரைத்த சந்தனம்

சந்தனக் கல்லும், கட்டையும் இருந்தால், சந்தனத்தை அரைத்து எடுத்துக் கொள்ளலாம். அதுவே உத்தமம். சந்தனம் சிறிய அளவே தேவையாக இருக்கும். சந்தனத்தை அரைத்து எடுக்க வசதி இல்லையென்றால் மட்டுமே, கடையில் விற்கும் சந்தனக் கட்டியை (வில்லையை) வாங்கித் தண்ணீரில் கரைத்து, சந்தனம் தயார் செய்து கொள்ளலாம்.

### 4) குத்து விளக்கு, தீபம்

குத்து விளக்கு ஒன்று அல்லது இரண்டினை (2 அல்லது 5 முகம்) ஏற்றி வைத்துக் கொள்ளவும். வெள்ளி அல்லது பித்தளை விளக்குகள் உசிதம். விரும்பினால் அதிக விளக்குகளை ஏற்றிக் கொள்ளலாம். பூஜை முடியும்வரை விளக்குகள் எரிந்து கொண்டு இருக்க வேண்டியிருப்பதால், அவ்வப்பொழுது எண்ணெய் விட வசதியாக தேவையான நல்லெண்ணெய் அருகில் எடுத்து வைத்துக் கொள்ளவும். தீபங்களை ஏற்ற

*வசதியாக வேறு ஒரு சிறிய விளக்கையும் ஏற்றி வைத்துக் கொள்ளவும்.*

5) நெய்த்திரிகள் - 8

*மஞ்சள் பிள்ளையார் பூஜை, ஶ்ரீ க்ருஷ்ணர் பூஜை, புநர் பூஜை என ஒவ்வொரு பூஜைக்கும் இரண்டு என நெய்யில் நனைத்த திரிகள் மொத்தம் ஆறு(6) திரிகள் நெய்தீபம் காட்ட எடுத்து வைத்துக் கொள்ளவும். புண்யாகவாசநம் செய்தால் அதற்கு 2 திரிகள் அதிகம் வேண்டும். நெய் தீபம் காட்ட தீபக்கால் அல்லது பித்தளை/வெள்ளியிலுலான விளக்குகளை உபயோகப் படுத்தவும். சில குடும்பங்களில் இரட்டை விளக்காக நெய்தீபம் ஏற்றும் வழக்கம் உண்டு. சிலர் ஒவ்வொரு நெய்தீபத்திற்கும் தனித்தனியாக தீபவிளக்குகளைத் தயார் செய்துகொள்வதுவும் உண்டு.*

6) பச்சரிசி

*கலஸம் மற்றும் பீடத்திற்கான பச்சரிசியைப் புதிதாகக் கடையில் வாங்கிக் கொள்ளவும். சுமார் ஒன்று அல்லது இரண்டு கிலோ போதுமானது.*

7) மஞ்சள் அக்ஷதை

*மந்த்ராக்ஷதை எனப்படும் மஞ்சள் கலந்த அக்ஷதை (முனை முறியாத பச்சரிசியில் கலந்தது) போதுமான அளவும், பூஜையில் கலந்து கொள்கிறவர்களின் எண்ணிக்கைக்குத் தகுந்தவாறும் தயார் செய்து கொள்ளவும்.*

8) தேங்காய், பழம், வெற்றிலை, பாக்கு

*பூஜையில் ஒவ்வொரு நைவேத்யத்தின் பொழுதும் தேங்காய், பழம், வெற்றிலை, பாக்கு சேர்த்து வைப்பது விசேஷ மாக சொல்லப்படுகிறது. விக்நேஸ்வர பூஜை, ஶ்ரீ பாலகோபால க்ருஷ்ண ஸ்வாமி பூஜை, ப்ராணப்ரதிஷ்டை, புநர் பூஜை என 4 நைவேத்யங்களுக்கு மொத்தம் 3 தேங்காய், 8 வாழைப்பழம், வெற்றிலை, பாக்கு தயாராக எடுத்து வைத்துக் கொள்ளவும். குறைந்த பட்சமாக ஶ்ரீ க்ருஷ்ணரின் ப்ரதான பூஜை நைவேத்யத் திற்காவது தேங்காய் உடைத்து வைக்கவும். ப்ராண ப்ரதிஷ்*

டையில் ஒரு கிண்ணத்தில் சிறிது தேன், பால், நெய் கலந்து மற்றும் வெற்றிலை, பாக்கு, பழம் நைவேத்யம் செய்ய சொல்லப் படுகிறது. விரும்பினுல் ப்ரதான பூஜை நைவேத்யத்திற்கு அதிக வாழைப்பழங்களை மற்ற பழங்களோடு வைக்கலாம்.

தேங்காய் சிறிய அளவில் இருந்தால் போதுமானது. பூவன் வாழைப்பழமும், கொட்டைப்பாக்கும் நைவேத்யத்திற்கு விசேஷமானது. மற்ற தேவைகளைப் பொறுத்து, பழம், வெற்றிலை வாங்கிக் கொள்ளவும். புண்யாகவாசனம் செய்தால் அதற்கு ஒரு செட் தேங்காய், பழம் தனியாக வேண்டும். ஓரிரு காய்கள் கெட வாய்ப்பிருப்பதால் ஓரிரு காய்கள் அதிகம் இருக்கட்டும்.

9) வாழை இலைகள்

கலஸம் வைத்தால், கலஸத்தை வைக்க ஒரு நுனி கிழியாத வாழையிலை தேவை. ஸ்வாமிக்கு நைவேத்யம் செய்வ தற்கு சில குடும்பங்களில் நுனி வாழையிலையில் படைக்கும் வழக்கம் உண்டு. பூஜை செய்தவர்கள் சாப்பிட வாழையிலை வேண்டியிருக்கும். தேவைக்குத் தகுந்தாற்போல் வாங்கிக் கொள்ளவும்.

10) சாம்பிராணி, கட்டி கற்பூரம்

பூஜைக்குக் கட்டிக்கற்பூரமாக மட்டும் பயன்படுத் துவது நல்லது. தூபத்திற்கு பால்சாம்பிராணி உசிதம். ஊதுபத்தி, தசாங்கம் போன்றவைகளையும் தூபத்திற்குப் பயன்படுத்தலாம். வீட்டில் உள்ளவற்றைப் பயன்படுத்தலாம். சாம்பிராணி போட அடுப்புக்கரி தணல் தேவை. பதிலாக தற்காலத்தில் கிடைக்கும் கப் சாம்பிராணி வாங்கினுல் தனியாக தணல் தேவையில்லை.

11) காய்ச்சாத பசும்பால்

க்ஷீராக்யப்ரதாநத்தில் அர்க்கயம்விட **காய்ச்சாத பசும்பால்** ஒரு சிறிய டம்ளர் அளவு வைத்துக் கொள்ளவும். பாக்கட் பாலாக இல்லாது இருப்பின் நலம். அப்படி சுத்தமான பசும்பால் கிடைக்காத நிலையில் ஜலத்தில் கடுகு கலந்து அர்க்யம் கொடுக்கலாம் என்று சொல்லப்படுகிறது.

12) மங்கள ஆரத்தி

தாம்பாளத்தில் மஞ்சள் பொடியுடன் சுண்ணும்பை ஜலத்தில் கரைத்து, அது இல்லாத பொழுது குங்குமத்தை ஜலத்தில் கரைத்து பூஜை முடிவில் மங்கள ஆரத்தி எடுக்க வேண்டும். சிலருக்கு ஜோதி விளக்கில் நெய்திரி போட்டு ஏற்றி, ஆரத்தியில் வைத்துக் காண்பிக்கும் வழக்கமும் உண்டு.

13) பூஜைக்கு பிம்பம்,கலஸம்,படங்கள்

கலஸம் வைத்து பூஜை செய்வதானுல், பச்சரிசி மற்றும் மங்கல பொருட்கள் அல்லது நீர் நிரப்பி கலஸம் தயார் செய்து கொள்ளவும். பிரதிமை,பிம்பம் அல்லது படங்களை வைத்து பூஜை செய்தால் அவற்றைத் தேவையானபடி தயார் செய்து கொள்ளவும்.

14) பூஜை பாத்திரங்கள்

பூஜைக்குக் தேவையான பாத்திரங்கள் மற்றும் சாமான்களின் பட்டியல் இணைப்பில் பக்கம் 129-131-ல் கொடுக்கப்பட்டுள்ளது. அதன்படி தேவையான சாமான்களைத் தயார் செய்து கொள்ளவும். வீட்டில் இருப்பவற்றை உபயோகப் படுத்திக் கொள்ளலாம். பூஜைக்கு பித்தளை, தாமிரம், வெள்ளி ஆகிய சாமான்கள் மட்டுமே பயன்படுத்துவது நல்லது. இரும்பு, எவர்சில்வர் பாத்திரங்களை முடிந்த வரை தவிர்க்கவும். பூஜைக்குப் பயன்படுத்தும் அனைத்து பாத்திரங்களையும் தூய்மையான இடத்தில் சுத்தம் செய்து உபயோகிக்கவும்.

15) மற்ற சாமான்கள், த்ரவியங்கள்

மேற்கண்டவை தவிர வாங்க வேண்டிய/தேவை யான மற்ற சாமான்கள் மற்றும் த்ரவியங்கள் இணைப்பில் உள்ள பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன.

********



ஸ்ரீ க்ருஷ்ண ஜந்மாஷ்டமீ வ்ரதத்தை
அனைவரும் சிறப்பாக அனுஷ்டித்து
ஸ்வாமியின் அருளினைப் பெற ப்ரார்த்திக்கிறோம்

# ஸ்ரீ க்ருஷ்ண ஜந்மாஷ்டமீ பூஜை பூஜாக்ரமம்

## (பூஜை செய்யும் முறை)

*பூஜைக்குத் தேவையான அனைத்தையும் தயார் செய்து கொண்டு, அனைவரும் கை, கால் அலம்பிக் கொண்டு, சுவாமியை மற்றும் பெரியவர்களை நமஸ்காரம் செய்துவிட்டு பூஜைக்கு அமரவும். பூஜை செய்பவர், ஆசமநம் செய்து விட்டு, மணியை அடித்து, விளக்கை ஏற்றி பூஜையை ஆரம்பிக்கவும். விளக்கேற்றும் பொழுது சொல்ல வேண்டிய ஸ்லோகம்:*

**ஶு⁴பம் கரோது கல்யாணம்**
**ஆரோக்யம் ஸுக²-ஸம்பத³: ।**
**மம பு³த்³தி⁴ பிரகாஶம் ச**
**தீ³ப ஜ்யோதி நமோऽஸ்து தே ॥**

**தீ³ப ஜ்யோதிர் பரப்³ரஹ்ம**
**தீ³ப ஜ்யோதிர் ஜநார்த³ந: ।**
**தீ³போ ஹரது மே பாபம்**
**தீ³ப ஜ்யோதிர் நமோऽஸ்து தே ॥**

*முதலில் தயார்செய்துள்ள மஞ்சள் பிள்ளையாருக்கு ஸ்ரீ விக்நேஸ்வரபூஜை. ஒரு பித்தளை அல்லது வெள்ளித் தட்டில் மஞ்சள் பிள்ளையாரை வைத்துக் கொள்ளவும். வேறு ஒரு பித்தளைத் தட்டில் தங்கள் வழக்கப்படி 4/5 வெற்றிலை, பாக்கு, இரண்டு பழம், உடைத்த தேங்காய், சிறிய வெல்லக்கட்டி, ஆகியவற்றை எடுத்து வைத்துக் கொள்ளவும்.*

*இருமுறை ஆசமநம் செய்து கொள்ளவும். பெண்கள் நாம மந்த்ரங்களை மட்டும் சொல்லவும். அவர்களுக்கு ப்ரணவ மந்த்ரம், அங்கவந்தநம் கிடையாது என சொல்லப்படுகிறது. இனி பூஜை தொடரும்.*

********

# 1. ஸ்ரீ விக்நேஸ்வர பூஜை

## 1.1. ஆசமநம், அங்கவந்தநம்

ஓம் । அச்யுதாய நம: ।
அநந்தாய நம: ।
கோவிந்தாய நம: ।
கேஶவ, நாராயண, மாத்₄வ, கோவிந்த, விஷ்ணோ,
மது₄ஸூ₂தந, த்ரிவிக்ரம, வாமந, ஸ்ரீத்₄ர, ஹ்ருஷீகேஶ,
பத்மநாப₄, தாமோதர ॥

## 1.2. பூஜை ஆரம்பப் பிரார்த்தனை

*மணியைஅடித்து, கீழ்க்கண்ட மந்த்ரங்களை* ***ஆண்கள் மட்டும்*** *சொல்லிக் கொண்டு பூஜையை ஆரம்பிக்கவும். குடும்ப வழக்கப்படி பவித்ரம், கட்டை தர்ப்பங்களை அணிந்து கொள்ளவும்.*

$» ஓம் த்₄த்ருவந் தே ராஜா வருணோ
த்₄த்ருவந் தேவோ ப்₃ருஹஸ்பதி: ।
த்₄த்ருவந் த இந்த்ரஶ்-சாக்₃நிஶ்ச
ராஷ்ட்ரந்-த்₄தாரயதாந்-த்₄த்ருவம் ॥
பர்வத இவா விசாசலி: ।
இந்த்ர இவேஹ த்₄த்ருவஸ்திஷ்ட₂ ।
இஹ-ராஷ்ட்ரமு-தாரய ।
அபி₄திஷ்ட₂ ப்₃ருதந்யத: ।
அத்₄தரே ஸந்து ஶத்ரவ: ।
$» இந்த்ர இவ வ்ருத்ரஹா-திஷ்ட₂ ॥

$» ஸுமுஹூர்தோஸ்து । ஸுப்ரதிஷ்டிதமஸ்து ॥

தேவீம் வா[1]சம-ஜநயந்த தேவா: ।
தாம் விஶ்[1]வரூபா: பஶ[1]வோ வதந்தி ।
ஸா [1]நோ மந்த்ரேஷ-மூர்ஜந் து[1]ஹாநா ।
த்தேநுர்-வாகஸ்மாநு: । பஸுஷ்டுதைது ।
$» ஸுமுஹூர்தோஸ்து । ஸுப்ரதிஷ்டிதமஸ்[1]து ॥

### 1.3. குரு, குல, கிராம தேவதை த்யாநம்

*கை கூப்பி கீழ்க்கண்ட மந்த்ரங்களைச் சொல்லவும்.*

குரு: ப்ப்ரஹ்மா: குரு: விஷ்ணு:
குரு: தேவோ மஹேஶ்வர: ।
குரு: ஸாக்ஷாத் பரப்ப்ரஹ்ம
தஸ்மை ஶ்ரீ குரவே நம: ॥
ஓம் ஶ்ரீ குருப்ப்யோ நம: ।
ஓம் அஸ்மத் குலதேவதாப்ப்யோ நம: ।
ஓம் அஸ்மத் இஷ்டதேவதாப்ப்யோ நம: ।
ஓம் அஸ்மத் க்ராமதேவதாப்ப்யோ நம: ।

*-கை கூப்பி ஶ்ரீ க்ருஷ்ண ஜந்மாஷ்டமீ பூஜை நன்கு நடைபெற எல்லா தெய்வங்களையும் வேண்டிக்கொள்ளவும்.*

### 1.4. ஆஸநபூஜை

*கீழ்க்கண்ட மந்த்ரங்களைச் சொல்லி புஷ்பம், அக்ஷதை ஆகியவற்றை தங்கள் ஆஸநத்திற்கு ஸமர்ப்பிக்கவும்.*

ப்ருத்திவ்யா: மேருப்ருஷ்டருஷி: ।
ஸுதலம் ச்சந்த: । கூர்மோ தேவதா ।

**ப்ருத்த்வி த்வயா த்த்ருதா லோகா**

**தேவி த்வம் விஷ்ணுநா த்ருதா: |**

**த்வஞ் ச த்தாரய மாம் தேவி**

**பவித்ரஞ் சாஸநம் குரு ||**

## 1.5. கண்டாபூஜை (வெங்கலமணிக்குப் பூஜை)

*வெங்கல மணிக்குச் சந்தனம், குங்குமம் இடவும். கீழ்க்கண்ட மந்த்ரங்களைச் சொல்லவும்.*

**ஆகமார்த்தந்து தேவாநாம்**

**கமநார்த்தந்து ரக்ஷஸாம் |**

**க்கண்டாரவம் கரோம்யாதௌ**

**தேவதாஹ்வாந லாஞ்சநம் ||**

*இப்போது மணியை அடித்துக்கொண்டே கீழ்க்கண்ட மந்த்ரங்களைச் சொல்லவும்.*

**ஆரம்ப்ப கால முஹூர்த்த:**

**ஶுப்பமுஹூர்த்த: |**

**அஸ்த் விதி ப்பவந்த:**

**அநுக்ருஹண்ணந்து |**

**ஶுப்பமுஹூர்தோஸ்து ||**

## 1.6. ஸ்ரீ மஹாகணபதி பிரார்த்தனை

*இப்பொழுது புஷ்பம், அக்ஷதையுடன் இரு கைகளை யும் கூப்பிக்கொண்டு (சேர்த்து வைத்துக்கொண்டு) கீழ்க்கண்ட மந்த்ரங்களைச் சொல்லவும்.*

**ஹரி: ஓம் | ததேவ லக்நம் ஸுதிநம் ததேவ**

**தாராபலம் சந்த்ர பலம் ததேவ |**

வித்³யா *பலம்* தைவ *பலம்* த*தே*வ,
லக்ஷ்மீபதே–அங்⁴க்ரியுகம் ஸ்மராமி ||
ஸுமுக²க*ஶ்*ச ஏகதந்த*ஶ்*ச
கபில: *கஜ*கர்ணக:
லம்*போதர*ஶ்ச விகட:
வி⁴க்நராஜ: விநாயக:
*த்⁴*ூமகேத: கணாத்⁴யக்ஷ:
ப்⁴பாலசந்த்³ர: *கஜா*நந:
வக்ரதுண்*ட*: *ஶூ*ர்பகர்ண:
ஹேரம்*ப*: ஸ்கந்தபூர்வஜ: |
கலா ஸங்க்யாநி நாமாநி ய:
பட்²டேத் ச்ச்ருணுயாதபி |
வித்³யாரம்ப்⁴*பே* விவாஹே ச
ப்ரவே*ஶே* நிர்கமே தத்²தா |
ஸங்க்ராமே ஸர்வ கார்யேஷு,
வி⁴க்நஸ் தஸ்ய ந ஜாயதே ||
அ*ப்⁴பீ*ப்ஸிதார்த்²த ஸித்³த⁴யர்த்²தம்:
பூஜிதோ ய: ஸுரைரபி: |
ஸர்வ வி⁴க்நச்²சிதே–தஸ்மை
கணாத்⁴திபதயே நம: ||

*இப்பொழுது இரண்டு கைகளிலும் புஷ்பம், அக்ஷதை எடுத்துக் கொண்டு, நடு விரல் மற்றும் மோதிர விரலை உள்மடக்கி, மற்ற விரல்களை மேல்நோக்கி நீட்டி கீழ்க்கண்ட மந்த்ரங்களைச் சொல்லிக் கொண்டு தலையின் இரு பக்க நெற்றிப்பொட்டில் (பக்கவாட்டில்) குட்டிக் கொள்ளவும்.*

**ஶுக்லாம் பர³த⁴ரம் விஷ்ணும்**
**ஶஶிவர்ணம் சதுர்பு⁴ஜம் ।**
**ப்ரஸந்ந-வத³நம் த்⁴யாயேத்**
**ஸர்வ விக்⁴நோப-ஶாந்தயே ॥**

## 1.7. ப்ராணாயாமம்

பெண்களுக்கு ப்ராணாயாமம் கிடையாது. *ஆண்கள் மட்டும் செய்யவும். வலதுகையின் சுண்டு விரல் மற்றும் மோதிர விரலாலும், கட்டை விரலாலும் மூக்கின் நுனியின் இரண்டு பக்கத்திலும் தொட்டுக் கொண்டு கீழ்க்கண்ட மந்த்ரங் களைச் சொல்ல வேண்டும்.*

**ஓம் பூ⁴: । ஓம் பு⁴வ: । ஓ³ம்ஸுவ: ।**
**ஓம் மஹ: । ஓம் ஜந: ।**
**ஓம் தப: । ஓ³ம்ஸத்யம் ।**
**ஓம் தத்[1]ஸவிதுர்-வ[2]ரேண்யம்**
**ப⁴ர்[1]கோ³ தே³வஸ்[1]ய தீ⁴மஹி ।**
**தி⁴யோ யோ [1]ந: ப்ரசோத³[2]யாத் ॥**
**ஓமாபோ ஜ்யோதீ-ரஸோ**
**ऽம்ருதம் ப்³ரஹ்ம**
**பூ⁴ர்பு⁴வஸ்ஸுவ-ரோம் ॥**

*-என்று சொல்லி முடித்துவிட்டு, வலது கையால், வலது காதை மூடினாற் போலத் தொடவும்.*

## 1.8. ஸங்கல்பம்

*இப்பொழுது ஸங்கல்பம் செய்ய இருக்கிறோம். வலது கையில் புஷ்பம், அக்ஷதை எடுத்துக் கொண்டு, வலது தொடையின் மேல் இடது கையை உள்ளங்கை மேல் நோக்கிய*

*வாறு இருக்கும்படி வைத்துக்கொண்டு வலது உள்ளங்கையை இடது உள்ளங்கையின் மேல் மூடியவாறு வைத்துக் கொண்டு, கீழ்க்கண்ட மந்த்ரங்களைச் சொல்ல வேண்டும்.*

**மமோபாத்த ஸமஸ்த துரித-க்ஷய-த்வாரா**
**ஸ்ரீ பரமேஶ்வர-ப்ரீத்யர்த்தம் ।**
(*அல்லது குடும்ப வழக்கப்படி* **ஸ்ரீமந் நாராயண-ப்ரீத்யர்த்தம்)**
**கரிஷ்ய மாணஸ்ய கர்மண:**
**நிர்விக்ந்நேந பரிஸமாப்த்யர்த்தம்**
**ஆதௌ ஸ்ரீ விக்நேஶ்வர பூஜாம் கரிஷ்யே ॥**

*-என்று சொல்லி புஷ்பம், அக்ஷதை, விரலில் சேர்த்துள்ள கட்டை தர்பங்கள் ஆகியவற்றைக் கீழே வடக்காகப் போடவும்.*

**அப உபஸ்ப்ருஶ்ய ।**

*-என்று பஞ்ச பாத்திரத்தில் உள்ள ஜலத்தால் தங்கள் கைகளைத் துடைத்துக் கொள்ளவும்.*

## 1.9. கணபதி ஆவாஹநம்

*இப்பொழுது சிறிய மஞ்சள் பிள்ளையாரை ஸ்தாபித்து பூஜை செய்ய இருக்கிறோம். புஷ்பம், அக்ஷதை கையில் எடுத்துக் கொண்டு ஆண்கள் மட்டும் பின்வரும் மந்த்ரங்களைச் சொல் லவும். பெண்கள் அதன்பின் தொடர்ந்து சொல்லவும்.*

*ஆண்கள் மட்டும்:*

$» **கணாநாம் த்வா**
**கணபதிகும் ஹவாமஹே**
**கவிம் கவீநாம்**
**உபமஶ்ரவஸ்-தமம் ।**
$» **ஜ்யேஷ்டராஜம் ப்ரஹ்மணாம்**

$» ப்ரஹ்மணஸ்பத ஆ ந:
ஶ்ருண்வந் நூதி⁴பி: ஸீத ஸாதநம் ||
$» ஓம் ⁴பூர்⁴புவஸ்ஸுவ-ரோம் |

- பெண்கள் தொடர்ந்து சொல்லவும்.

கஜாநநம் ⁴பூத க₃ணாதி³ ஸேவிதம்
கபித்₂த ஜம்பூ₃ ப²லஸார ப⁴க்ஷிதம் |
உமாஸுதம் ஶோக விநாஶ காரணம்
நமாமி விக்₄நேஶ்வர பாத₃ பங்கஜம் ||

ஸ்ரீ மஹாகணபதயே நம:
அஸ்மிந் ஹரித்₃ரா பி₃ம்பே₃ ஸுமுக₂ம்
ஸ்ரீ மஹாகணபதிம் த்₄யாயாமி
ஸ்ரீ மஹாகணபதிம் ஆவாஹயாமி ||

*-என்று சொல்லி மஞ்சள் பிள்ளையாருக்கு அக்ஷதை, புஷ்பம் ஸமர்ப்பிக்கவும்.*

## 1.10. ஷோடசோபசார பூஜை

*கையில் அக்ஷதை, புஷ்பம் கையில் எடுத்துக்கொண்டு,*

ஸ்ரீ மஹாகணபதயே நம : ஆஸநம் ஸமர்பயாமி |

*-என்று சொல்லி அக்ஷதை, புஷ்பம் ஸமர்ப்பிக்கவும். கீழ்க்கண்ட மந்த்ரங்களுக்கு உத்திரணியில் ஜலம் எடுத்து பாத்திரத்தில் விடவும்.*

ஸ்ரீ மஹாகணபதயே நம:
பாத₃யோ: பாத்₃யம் ஸமர்பயாமி |
ஸ்ரீ மஹாகணபதயே நம:
அர்க்₄யம் ஸமர்பயாமி |

ஸ்ரீ மஹாகணபதயே நம:
ஆசமநீயம் ஸமர்பயாமி ।
ஸ்ரீ மஹாகணபதயே நம:
மத்⁴புபர்கம் ஸமர்பயாமி ।
ஓம் ப்⁴பூர்ப்⁴புவஸ்ஸுவ:
ஸ்ரீ மஹாகணபதயே நம:
ஸ்நாநம் ஸமர்பயாமி ।
ஸ்ரீ மஹாகணபதயே நம:
ஸ்நாநா-நந்தரம் ஆசமநீயம் ஸமர்பயாமி ॥

*கீழ்க்கண்ட மந்த்ரங்களுக்கு புஷ்பம், அக்ஷதை எடுத்து மஞ்சள் பிள்ளையாருக்கு ஸமர்ப்பிக்கவும்.*

ஸ்ரீ மஹாகணபதயே நம:
வஸ்த்ரார்த²ம் அக்ஷதாந் ஸமர்பயாமி । *(அக்ஷதை)*
ஸ்ரீ மஹாகணபதயே நம:
யஜ்ஞோபவீதார்த²ம் அக்ஷதாந் ஸமர்பயாமி । *(அக்ஷதை)*
ஸ்ரீ மஹாகணபதயே நம:
ஆபரணார்த²ம் அக்ஷதாந் ஸமர்பயாமி । *(அக்ஷதை)*
ஸ்ரீ மஹாகணபதயே நம:
திவ்யபரிமள க³ந்தா⁴ந் தா⁴ரயாமி । *(சந்தனம்)*
ஸ்ரீ மஹாகணபதயே நம:
க³ந்த⁴ஸ்யோபரி அக்ஷதாந் ஸமர்பயாமி । *(அக்ஷதை)*
ஸ்ரீ மஹாகணபதயே நம:
ஹரித்ரா குங்குமம் ஸமர்பயாமி । *(குங்குமம்)*
ஸ்ரீ மஹாகணபதயே நம:
மந்த்ராக்ஷதாந் ஸமர்பயாமி । *(அக்ஷதை)*

**ஸ்ரீ மஹாகணபதயே நம:**
**புஷ்பமாலாம் ஸமர்பயாமி ।**

*-தொடுத்த பூமாலையைப் ஸமர்ப்பிக்கவும்.*

**ஸ்ரீ மஹாகணபதயே நம: புஷ்பை: பூஜயாமி ।**

*-புஷ்பம் ஸமர்ப்பிக்கவும்.*

## 1.11. அர்ச்சனை

*கீழ்க்கண்ட மந்த்ரங்களைச் சொல்லி, அக்ஷதை புஷ்பம் ஸமர்ப்பித்து, மஞ்சள் பிள்ளையாருக்கு அர்ச்சனை செய்யவும்.*

**ஓம் ஸுமுகாய நம:**
**ஓம் ஏகதந்தாய நம:**
**ஓம் கபிலாய நம:**
**ஓம் கஜகர்ணகாய நம:**
**ஓம் லம்போதராய நம:**
**ஓம் விகடாய நம:**
**ஓம் விக்நராஜாய நம:**
**ஓம் விநாயகாய நம:**
**ஓம் த்தூமகேதவே நம:**
**ஓம் கணாத்யக்ஷாய நம:**
**ஓம் பாலசந்த்ராய நம:**
**ஓம் கஜாநநாய நம:**
**ஓம் வக்ரதுண்டாய நம:**
**ஓம் ஶூர்பகர்ணாய நம:**
**ஓம் ஹேரம்பாய நம:**
**ஓம் ஸ்கந்த பூர்வஜாய நம:**
**ஓம் ஸித்திவிநாயகாய நம:**

**ஓம் ஸ்ரீ மஹாகணபதயே நம:**
**நாநாவித்த பரிமள பத்ர புஷ்பாணி**
**அர்சநாந் ஸமர்பயாமி ||**

*-புஷ்பம் ஸமர்ப்பிக்கவும்.*

## 1.12. தூபம், தீபம்

*மணி அடித்துக்கொண்டு தூபம் ஏற்றிக் காண்பித்துக் கொண்டே கீழ்க்கண்ட மந்த்ரங்களைச் சொல்லவும்.*

**தஶாங்கம் குக்குலோபேதம்**
**ஸுகந்த்தம் ச மநோஹரம் |**
**ஆக்ரேய: ஸர்வ தேவாநாம்**
**தூபோऽயம் ப்ரதி-க்ருஹ்யதாம் ||**

**ஸ்ரீ மஹாகணபதயே நம: |**
**ஸுகந்த்த தூபம் ஆக்ராபயாமி |**

*-தூபத்தைச் சுற்றிவிட்டு புஷ்பம் ஸமர்ப்பிக்கவும். மணி அடித்துக்கொண்டு நெய் தீபம் ஏற்றிக் காண்பித்துக் கொண்டே கீழ்க்கண்ட மந்த்ரங்களைச் சொல்லவும்.*

**ஸாஜ்யம் த்ரிவர்த்தி ஸம்யுக்தம்**
**வஹ்நிநா யோஜிதம் மயா |**
**க்ருஹாண மங்களம் தீபம்**
**த்ரைலோக்ய திமிராபஹம் ||**

**ஸ்ரீ மஹாகணபதயே நம:**
**க்ருத தீபம் தர்ஶயாமி |**

*-தீபத்தைச் சுற்றிவிட்டு புஷ்பம் ஸமர்ப்பிக்கவும்.*

**து⁴ப தீபாநந்தரம் ஆசமநீயம் ஸமர்பயாமி ||**

*-உத்திரணியில் 2 முறை ஜலம் எடுத்து பாத்திரத்தில் விடவும்.*

**புஷ்பாணி ஸமர்பயாமி ||**

*-என்று சொல்லி கையில் உள்ள புஷ்பத்தை ஸ்வாமி யிடம் சேர்ப்பிக்கவும்.*

## 1.13. நைவேத்யம்

**1.13.1. பரிஷேசநம்.** *தேங்காய் உடைத்து, வெற்றிலை, பாக்கு, பழம், வெல்லம் ஆகியவை வைத்து, மணி அடித்து, கீழ்க்கண்ட மந்த்ரத்தைச் சொல்லி பரிஷேசநம் செய்யவும்.*

**ஓம் பூ⁴ர்பு⁴வஸ்ஸுவ:**

*-என்று தீர்த்தத்தினால் ப்ரோக்ஷிக்கவும். கீழ்க்கண்ட மந்த்ரத்தைச் சொல்லி அவற்றிற்கு தீர்த்தத்தால் ப்ரதக்ஷிணம் செய்யவும்.*

**ஓம் தத்¹ஸவிதுர்-வ²ரேண்யம்**
**ப⁴ர்¹கோ³ தேவஸ்¹ய தீ⁴மஹி |**
**தி⁴யோ யோ ¹ந: ப்ரசோத³²யாத் ||**
**தே¹வ ஸவித: ப்¹ரஸுவ |**

*பகலில்*

**ஸத்யந்-த்வா-ருதேந ப¹ரிஷிஞ்சாமி |**

*மாலையில் / இரவில்*

**ருதம்-த்வா ஸத்யேந ப¹ரிஷிஞ்சாமி |**

*-என்று தீர்த்தத்தினால் ப்ரோக்ஷிக்கவும். கீழ்க்கண்ட மந்திரத்தைச் சொல்லி உத்திரணி தீர்த்தம் பாத்திரத்தில் விடவும்.*

**1.13.2. சமர்பணம்.** *கையில் புஷ்பத்தை எடுத்துக்கொண்டு இடது கையால் ப்ரஸாத பாத்திரத்தைத் தொட்டுக் கொண்டு, தேங்காய் முதலான ப்ரஸாத பொருட்களை ஸ்வாமிக்குக் நைவேத்யம் காட்ட வேண்டும். கீழ்க்கண்ட ஒவ்வொரு மந்த்ரத்தைச் சொல்லும் பொழுதும், வலது கையை பாத்திரத்திலிருந்து மஞ்சள் பிள்ளையாரை நோக்கிக் கொண்டு சென்று காண்பித்து விட்டுத் திரும்பவும் கையை பாத்திரத்திற்குக் கொண்டு வந்து, இப்படியே மந்த்ரங்கள் முடியும் வரை காண்பிக்க வேண்டும்.*

**ஓம் ப்ராணாய ஸ்வாஹா ।**

**ஓம் அபாநாய ஸ்வாஹா ।**

**ஓம் வ்யாநாய ஸ்வாஹா ।**

**ஓம் உதாநாய ஸ்வாஹா ।**

**ஓம் ஸமாநாய ஸ்வாஹா ।**

**ஓம் ப்ரஹ்மணே ஸ்வாஹா ।**

**மஹாகணபதயே நம:**

**நாரிக்கேளக்கண்டம், கதலீப்பலம்,**

**குடக்கண்டம், அம்ருதம்,**

**மஹா நைவேத்யம் நிவேதயாமி ॥**

*-என்று சொல்லி கையில் உள்ள புஷ்பத்தை ஸ்வாமியிடம் சேர்ப்பிக்கவும்.*

**அம்ருதா-பிதாநமஸி ॥**

*-என்று சொல்லி உத்திரணியில் ஜலம் எடுத்து பாத்திரத்தில் விடவும்.*

**நைவேத்யா-நந்தரம் ஆசமநீயம் ஸமர்பயாமி ।**

*-என்று சொல்லி உத்திரணியில் ஜலம் எடுத்து இரண்டு முறை பாத்திரத்தில் விடவும்.*

**1.13.3.தாம்பூலதாரணம்.** *இப்போது உத்திரணியில் ஜலம் எடுத்து, கீழ்க்கண்ட மந்த்ரங்களை சொல்லி தாம்பூலம் நிவேதநம் செய்யவும். கையில் புஷ்பம் எடுத்துக் கொள்ள வேண்டாம்.*

**ஓம் ்பூர்்புவஸ்ஸுவ:**

*-என்று தீர்த்தத்தினால் ப்ரோக்ஷிக்கவும். கீழ்க்கண்ட மந்த்ரத்தைச் சொல்லி அவற்றிற்கு தீர்த்தத்தால் ப்ரதக்ஷிணம் செய்யவும்.*

**பூகீ்பல ஸமாயுக்தம்**

**நாகவல்லீ தளைர்யுதம் ।**

**கர்பூர சூர்ண ஸம்யுக்தம்**

**தாம்பூலம் ப்ரதிக்ருஹ்யதாம் ॥**

**ஸ்ரீ மஹாகணபதயே நம: ।**

**ஏலா லவங்க ஸகித**

**திவ்ய பரிமள தாம்பூலம் நிவேதயாமி ।**

**உத்தரா ்போஜநம் ஸமர்பயாமி ॥**

*-என்று சொல்லி உத்திரணியில் ஜலம் எடுத்து பாத்திரத்தில் விடவும்.*

## 1.14. கற்பூர ஆரத்தி

*இப்பொழுது ஒரு சிறிய கட்டி கற்பூரத்தை ஏற்றி, மணியை அடித்துக் கொண்டு, கீழ்க்கண்ட மந்த்ரங்களைச் சொல்லிக் கொண்டே மஞ்சள் பிள்ளையாருக்குக் காட்டவும்.*

**ஓம் நமோ வ்ராத-பதயே ।**

**நமோ கணபதயே ।**

**நம: ப்ரமத்த பதயே ।**

**நமஸ்தேऽஸ்து லம்போதராய**

**ஏக தந்தாய விக்ந-நாஶிநே ஶிவஸுதாய**

**ஸ்ரீ வரத-மூர்த்தயே நமோ நம: ||**

**சந்த்ர ஆதித்யௌஶ்சதரணீ**

**வித்யுதக்நி: த்வமேவ ச |**

**த்வமேவ ஸர்வ ஜ்யோதீ:**

**நீராஜநம் இதம் ப்ரபோ ||**

**ஸ்ரீ மஹாகணபதயே நம: |**

**கர்பூர-நீராஜநம் தர்ஶயாமி |**

*-கற்பூர ஆரத்தியை பிள்ளையாருக்குக் காட்டியபின், கற்பூர தட்டை கீழே வைத்துவிட்டு, புஷ்பம் எடுத்து கற்பூரத்தை சுற்றிக் காண்பித்து பாதத்தில் சேர்க்கவும்.*

**நீராஜாநநந்தரம் ஆசமநீயம் ஸமர்பயாமி |**

*-என்று சொல்லி உத்திரணியில் ஜலம் எடுத்து பாத்திரத்தில் விடவும்.*

**ரக்ஷாந்தாரயாமி |**

**ரக்ஷ, ரக்ஷ, ரக்ஷ ||**

*-என்று ஸ்வாமியை ஸேவிக்கவும். எல்லோரும் இப்போது கற்பூரம் ஒற்றிக் கொள்ள வேண்டும். உத்திரணி ஜலம் எடுத்து கைகளைத் துடைத்துக் கொள்ளவும்.*

## 1.15. மந்த்ர புஷ்பம்

*புஷ்பம், அக்ஷதை கையில் எடுத்துக் கொண்டு தெரிந்த **ஆண்கள் மட்டும்** கீழ்க்கண்ட மந்த்ரங்களைச் சொல்லி பிள்ளையாருக்குப் ஸமர்ப்பிக்கவும். பெண்களும், மற்றவர் களும் அடுத்த ப்ரார்த்தனை மந்த்ரங்களிலிருந்து தொடரவும்.*

$»யோ஽பாம் புஷ்பம் வேத
புஷ்பவாந் பிரஜாவாந்
பஶூமாந் ப்பவதி ।
சந்த்ரமா வா அபாம் புஷ்பம்
புஷ்பவாந் பிரஜாவாந்
பஶூமாந் ப்பவதி ॥
யோ வேதாதௌ ஸ்வர:
ப்ரோக்தோ வேதாந்தே ச ப்ரதிஷ்ட்டித: ।
தஸ்ய ப்ரக்ருதி லீநஸ்ய ய:
பரஸ்ஸ மஹேஶ்வர: ॥
ஸ்ரீ மஹாகணபதயே நம:
$»வேதோக்த மந்த்ரபுஷ்பம் ஸமர்பயாமி ॥

*-என்று சொல்லி மஞ்சள் பிள்ளையாருக்குப் புஷ்பம் ஸமர்ப்பிக்கவும்.*

**ஸுவர்ண புஷ்பம் ஸமர்பயாமி ।**

*-என்று சொல்லி தங்கம் அல்லது மற்ற நாணயத்தை அல்லது புஷ்பம், அக்ஷதை பாதத்தில் ஸமர்ப்பிக்கவும்.*

**ஸமஸ்த தேவோபசார ராஜோபசார**
**பூஜாம் ஸமர்பயாமி ॥**

*-என்று சொல்லி புஷ்பம், அக்ஷதை ஸமர்ப்பிக்கவும்.*

## 1.16. ப்ரார்த்தனை, நமஸ்காரம்

*இப்பொழுது அனைவரும் புஷ்பம், அக்ஷதை கையில் எடுத்துக் கொண்டு, இரு கைகளையும் கூப்பிக் கொண்டு, கீழ்க் கண்ட மந்திரங்களை எல்லோரும் சொல்லி, ஆத்ம ப்ரதக்ஷிணம் செய்து, பிரார்த்தனை செய்து, நமஸ்காரம் செய்து கொள்ளவும்.*

வக்ரதுண்ட மஹாகாய
   ஸூர்யகோடி ஸமப்ரப்ப ।
அவிக்க்நம் குரு மே தேவ
   ஸர்வ கார்யேஷு ஸர்வதா ॥

அப்பீப் ஸிதார்த்த ஸித்த்யர்த்தம்
   பூஜிதோ ய: ஸுரைரபி ।
ஸர்வ விக்க்நச்ச்சிதே தஸ்மை
   கணாத்திபதயே நம: ॥

நமோ நமோ கணேஶாய
   நமஸ்தே விஶ்வரூபிணே ।
நிர்விக்க்நம் குருமே கார்யம்
   நமாமி த்வாம் கஜாநந ॥

அகஜாநந பத்மார்க்கம்
   கஜாநநம் அஹர்நிஶம் ।
அநேகதந்தம் ப்பக்தாநாம்
   ஏகதந்தம் உபாஸ்மஹே ॥

ஸ்ரீ மஹாகணபதயே நம:
ஸர்வோபசாராந் ஸமர்பயாமி ॥
ஸ்ரீ மஹாகணபதயேநம:
உத்தரே கர்மணி நிர்விக்நேந
பரிஸமாப்த்யர்தம் பதே பதே ।
அநந்த கோடி ப்ரதக்ஷிண ப்ரார்த்தந
நமஸ்காராந் ஸமர்பயாமி ।
அநயா பூஜயா ஸ்ரீமந் மஹாகணபதி ப்ரீயதாம் ॥

-என்று சொல்லி கையில் உள்ள புஷ்பம், அக்ஷதையை மஞ்சள் பிள்ளையாருக்கு ஸமர்ப்பித்துவிட்டு, ஒரு உத்திரணி தீர்த்தம் பாத்திரத்தில் விட்டு, நமஸ்காரம் செய்யவும்.

ப்ரதக்ஷிண நமஸ்காரம் செய்தபின் மஞ்சள் பிள்ளை யாருக்கு அணிவித்த புஷ்பம், அக்ஷதை, நைவேத்ய ப்ரஸாதங் களை பூஜை செய்பவர் தாம்பாளத்தில் எடுத்துக் கொண்டு,

**ஸ்ரீ மஹாகணபதி பூஜா ப்ரஸாத ஸித்³திரஸ்து ।**

-என்று சொல்லி கண்களில் ஒற்றிக்கொண்டு, புஷ்பங்கள், அக்ஷதையை அனைவரும் சிரஸில் போட்டுக் கொள்ள வேண்டும். பெண்கள் பூக்களை தலையில் சூடிக் கொள்ளவும்.

ஸ்ரீ மஹாகணபதி பூஜை முடிவுற்றது.

ஸ்ரீ க்ருஷ்ண ஜந்மாஷ்டமீ பூஜை ஆரம்பம்.

********

# உ. ஶ்ரீ க்ருஷ்ண ஜந்மாஷ்டமீ ப்ரதாந பூஜை

*ஶ்ரீ பாலகோபாலக்ருஷ்ண ஸ்வாமி ப்ரதாந பூஜை ஆரம்பம். ஶ்ரீ க்ருஷ்ணர் பிம்பம் /கலஸம்/சித்ரம் மற்றும் பூஜை த்ரவியங்களைத் தயார் செய்து கொண்டு, ஆவாஹநம் செய்து பூஜை செய்ய வேண்டும். மணியை அடித்து, கீழ்க்கண்ட மந்த்ரங்களைச் சொல்லிக் கொண்டு பூஜையை ஆரம்பிக்கவும். குடும்ப வழக்கப்படி பவித்ரம், கட்டை தர்ப்பங்களை அணிந்து கொள்ளவும்.*

## 2.1. ஶ்ரீ கணபதி பிரார்த்தனை

*இப்போது பூஜை செய்ய உட்கார்ந்தவர், கையில் புஷ்பம், அக்ஷதை எடுத்துக்கொண்டு, நெற்றிப்பொட்டின் இரு பக்கமும் குட்டிக் கொண்டு, கீழ்க்கண்ட மந்த்ரங்களைச் சொல்ல வேண்டும்.*

**ஶுக்லாம் பரத⁴ரம் விஷ்ணும்**
**ஶஶிவர்ணம் சதுர்பு⁴ஜம் ।**
**ப்ரஸந்ந-வதநம் த்⁴யாயேத்**
**ஸர்வ விக்⁴நோப-ஶாந்தயே ॥**

## 2.2. ப்ராணாயாமம்

*பெண்களுக்கு ப்ராணாயாமம் கிடையாது. ஆண்களுக்கு மட்டும் தான்.*

$» **ஓம் பூ⁴: । ஓம் பு⁴வ: । ஓகும்ஸுவ: ।**
**ஓம் மஹ: । ஓம் ஜந: ।**
**ஓம் தப: । ஓகும்ஸத்யம் ।**
**ஓம் தத்[1]ஸவிதுர்-வ[2]ரேண்யம்**
**ப⁴ர்[1]கோ³ தேவஸ்[1]ய தீ⁴மஹி ।**
**தி⁴யோ யோ [1]ந: ப்ரசோத[2]யாத் ॥**
$» **ஓமாபோ ஜ்யோதீ-ரஸோ**

ऽம்ருதம் ப்ரஹ்ம

$»ப்பூர்ப்புவஸ்ஸுவ-ரோம் ||

*-என்று சொல்லி முடித்துவிட்டு, வலது கையால், வலது காதை மூடினாற் போலத் தொடவும்.*

## 2.3. ஸங்கல்பம்

*நடப்பு வருஷம் பஞ்சாங்கத்தில் உள்ளபடி, அன்றைய தினத்திற்கான வருஷம், அயநம், ருது, மாதம், பக்ஷம், திதி, கிழமை, நக்ஷத்ரம், யோகம், கரணம் ஆகியவற்றைக் குறித்து வைத்துக் கொள்ளவும். (தமிழ் மாத, நாட்களுக்கான ஸம்ஸ்க்ருத மாற்று வார்த்தைகள் **பக்கம் 115-118-ல்** கொடுக்கப்பட்டு உள்ளன). புஷ்பம், அக்ஷதை கையில் எடுத்துக் கொண்டு ஸங்கல்பம் செய்ய வேண்டும். இடதுகை வலது துடையின் மேல் உள்ளங்கை மேல் நோக்கியும், வலது உள்ளங்கை அதன் மீது மூடியபடி வைத்தபடி, கீழ்க்கண்ட மந்த்ரங்களைச் சொல்லவும்.*

**மமோபாத்த ஸமஸ்த துரித-க்ஷய-த்வாரா**

**ஸ்ரீ பரமேஶ்வர-ப்ரீத்யர்த்தம்**

(*அல்லது குடும்ப வழக்கப்படி* **ஸ்ரீமந் நாராயண-ப்ரீத்யர்த்தம்)**

**ஶுபே ஶோபநே முஹூர்த்தே**

**அத்ய ப்ரஹ்மண: த்விதீய பரார்த்தே,**

**ஶ்வேத-வராஹ கல்பே, வைவஸ்வத-மந்வந்தரே,**

**அஷ்டா-விம்ஶதி-தமே, கலியுகே, ப்ரதமே பாதே,**

**ஜம்பூத்வீபே, பாரத வர்ஷே, பரதக்கண்டே,** **#1**

